# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026
கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தமிழ்

# செவ்வியல் இலக்கியம்: புறநானூறு அரசவாகைத் துறையில் மன்னர்களின் வாழ்த்துச் செய்திகள்

# *Classical Literature: Congratulatory Messages of Kings in Puranahundred Kingdoms*

**வி.கலாவதி, (***Ref.No.BDU2020632778717)* பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை உயராய்வு மையம் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த),தஞ்சாவூர்-7

(பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

**முனைவர் ஜோ.அருணாதேவி,** நெறியாளர். உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை உயராய்வு மையம். குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) தஞ்சாவூர்-7 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

***V.Kalavathi****(Ref.No.BDU2020632778717), Research Scholar, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)*

*ORCiD: https://orcid.org/0000-0001-8585-8046*

***Dr.J. Arunadevi,*** *Research Advisor ,Assistant Professor, Department of Tamil, Kunthavai Naacchiyaar Government Arts College for Women (Autonomous), Thanjavur-613 007, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)*

*ORCiD: https://orcid.org/0009-0002-6043-5025*

***Abstract***

*Literature is the "mirror of time" that captures the lives of the people of the world. These literatures bring before our eyes the condition of the people living in the times they appeared in, no matter how many years it is happening today. In this way, the literary glory of the Tamil language, which has the distinction of being the language that appeared at the time of the emergence of man, is immeasurable. The society of Tamil language, which has improved itself according to the newness of time, can be seen as an ark full of treasure. A miraculous teacher who conveys messages from water conditions to weather to the people of the moon. That Sangha literature was composed*

*one day. Through this article you can find the description of Puranahunuttu royal department, the poets who sang, the kings who were sung like Movendras, the kings of Kurunila and their victory, valor, fame and gifts.*

***Keywords:*** *Arasavaigaithurai, Kings, Cheras, Cholas, Pandyas.*

**ஆய்வுச்சுருக்கம்**

*உலக மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் "காலக் கண்ணாடி" பெட்டகமாகத் திகழ்வது இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் அவை தோன்றும் காலங்களில் வாழும் மக்களின் நிலையினை எத்தனை ஆண்டுகளாயினும் இன்று நிகழவ்துபோல நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன. அவ்வகையில் மனிதன் தோன்றிய காலத்தே தோன்றிய மொழி என்னும் சிறப்புடன் திகழும் தமிழ்மொழியின் இலக்கியப் பெருமைகள் அளவிடற்கரியன. காலந்தோறும் புதுமைக்கேற்ப தன்னைச் சீர்மை செய்து மேன்மையுற்று விளங்கும் தமிழ்மொழியின் சங்க இலக்கிய அறிவு புதையல் நிறைந்து காணப்படும் பேழை எனலாம். நீர்நிலை முதல் வானிலை வரையிலானச் செய்திகளை நிலவளமு மக்களுக்கு காலங்கடந்தும் கருத்துக்களை உரைக்கும் அதிசய ஆசான். இச்சங்க இலக்கியங்கள் ஒருநாள் படைக்கப்பட்டதன்று. புறநானூற்று அரசவாகைத் துறை விளக்கம், பாடிய புலவர்கள், பாடப்பட்ட அரசர்களான மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் அவர்தம் வெற்றி, வீரம், புகழ், கொடை பற்றிய செய்திகளை இக்கட்டுரையின் மூலம் காணலாம்.*

**திறவுச்சொற்கள்:** *அரசவாகைத்துறை, அரசர்கள், சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள்.*

**முன்னுரை**

*பண்டைத் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களும் பல குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். அவர்களது இயல்பினையும், வெற்றிச் சிறப்பினையும், கொடைப் பெருமையையும் கூறும் துறையே அரச வாகைத் துறை. இத்துறையின் வழி மன்னர்களின் இயல்பை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**அரச வாகைத்துறை**

*வாகைத் திணையில் 32 துறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று அரசவாகைத் துறை. அரசனது இயல்பு, வெற்றி முதலியவற்றைக் கூறுகிறது.*

**பகலன்ன வாய்மொழி**

**இகழ்வேந்தன் இயல்புரைத்தன்று** (*ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, ப.164*)

நுகத்தின்கண் பகலாணி போன்ற நடுவுநிலைச் சொல்லினையுடைய வேந்தனது இயல்பினைக் கூறியது. செங்கோன்மை உடைய அரசனது இயல்பைக் கூறியது அரசவாகை என்னும் துறையாம். இதனை,

**ஐவகை மரபின் அரசர் பக்கம்** (தொல். புறத்திணையியல், இளம்பூரணருரை, ப.108) என்று தொல்காப்பியர் கூறுவார். ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் ஆகிய ஐந்தும் அரசனுக்குரிய கடமைகளாகும்.

**காவல் அமைந்தான் கடலுலகம் காவலால்**

**ஆவல் அறியா துயிர்க்கு வகை - மேவருஞ்சீர்**

**ஐந்தொழில் நான்மறை முத்தீ இருபிறப்பு**

**வெந்திறல் தண்ணளியெம் வேந்து** (புறப்பொருள் வெண்பாமாலை, மேற்கோள், ப.164) பொருந்துதல் வந்த தன்மையினையுடைய ஐந்து தொழிலையும் நான்கு வேதத்தினையும், மூன்று தீயினையும் இருவகைப் பிறப்பினையும் பகைவரிடத்து வெவ்விய ஆற்றலினையும், நண்பனிடத்து குளிர்ந்த அருளினையும் உடையவனாகிய எம் மன்னன், கடல் சூழ்ந்த உலகினைக் காத்தல் தொழிற்கண் அமைந்தான், இத்தகையோன் காத்தலானே பல்வேறு உயிர்களுக்கும் மகிழ்ச்சி ஒழிதலறியாது.

**அரசவாகைத் துறையில் பாடிய புலவர்கள்**

குறுங்கோழியூர்க் கிழார், குடபுலவியனார், ஐயூர் மூலங்கிழார், கல்லாடனார், மாங்குடி கிழார், கோவூர்கிழார், தாமப்பல் கண்ணனார், ஐயூர் முடவனார், மருதன் இளநாகனார், பொருந்திலிளங்கீரனார், எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரன், வெண்ணிக் குயத்தியார், இடைக்குன்றூர் கிழார், சாத்தந்தையார், ஔவையார், பெருஞ்சாத்தனார், கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார் போன்றோராவர்.

**பாடப்பட்ட அரசர்கள்**

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் நலங்கிள்ளி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சோழன் மாவளத்தான், சோழன் நெடுங்கிள்ளி, பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறை, சேரமான் குட்டுவன் கோதை, சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளிச் சேட்சென்னி, கரிகால் பெருவளத்தான், சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, முக்காவனாட்டு ஆமூர் மல்லன், அதியமான் நெடுமானஞ்சி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தேர்வண் மலையன், ஏனாதி திருக்கிள்ளி, பிட்டங்கொற்றன்,

மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன் ஆகியோர் புறநானூற்று அரசவாகைத் துறையில் பாடப்பட்ட அரசர்களாவர்.

**அரச வாகைத் துறையில் அரசர்கள்**

புறநானூற்றில் அரச வாகைத் துறைப் பாடல்கள் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரது இயல்பை எடுத்துரைக்கின்றன.

**மூவேந்தர்கள்**

பண்டைத் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் மூவேந்தர்கள் எனப்பட்டனர். இவர்களது வீரம், பெருமை, ஆற்றல், வேலினது சிறப்பு, அரணது பெருமை, வேள்வி செய்த நிலை, நாட்டு வளம், வெற்றி, போர்மறம், ஈகையறம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

**சேரர்கள்**

**மேலைக் கடலுக்கும், மேலை மலைத்தொடர்க்கும் இடைப்பட்ட பகுதி சேரநாடு எனப்படும். மூவேந்தர்களை நிரல்படுத்தும் தமிழ் நூல்கள் சேர, சோழ, பாண்டியர் எனச் சேரரை முதலில் வைத்துக் குறிப்பிடுகின்றன (ஆ.இராமகிருஷ்ணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ப.53)**

என்று ஆ.இராமகிருட்டிணன் கூறுகிறார். கார்மேகம் போலத் திரண்டு எழும் பரிசைப் படையினையும், யானைப் படையினையும், காலாட் படையினையும் இடிபோல் முழங்கும் முரசினையும் எல்லோர்க்கும் வரையாது வழங்கும் வண்மையுடையவன் என்று சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையைக் குறுங்கோழியூர்க் கிழார் பாடியுள்ளார்.

'சேரர் பெருமானே! கடல், நிலம், காற்று, வானம் ஆகியவற்றை அளந்து அறிந்தாலும் தன் அறிவுக் கண்ணோட்டமும் அளவிட்டுக் கூறுவதற்கு அரியன.

**நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்**

**அளப்பரியையே** (நாராயண வேலுப்பிள்ளை, பதிற்றுப்பத்து, ப.16)

என்று பதிற்றுப்பத்திலும் கூறப்படுகிறது.

நின் குடை வாழ்வோர் சோறாக்கும் நெருப்புடனே செஞ்ஞாயிற்றின் வெம்மையன்றிப் போர் வறுமை ஆகிய வெம்மைகளை அறியார்.

**திருவில் லிட்டுத் திகழ்தரு மேனியன்** (புலியூர்க் கேசிகன், சிலம்பு, ப.274)

இந்திர வில்லன்றிக் கொலை வில்லை அறியார். நின் மண்ணைக் கருவுற்ற பெண்டிர் மசக்கையால் உண்பாரே யன்றிப் பகைவர் ஒரு போதும் கைக் கொள்ளார்.

**பொருவார் மண்ணெடுத்து உண்ணும்**

**அண்ணல் யானை வண்டேர்த் தொண்டையர் (**இரா.இராகவையங்கார், குறுந்தொகை, ப.381)

அத்தகைய அரிய நாடும் காவல் மிகுந்த அரஹம் அறம் நிரம்பிய செங்கோன்மையும் உடையவனே! தீய நமித்தமாகப் புதுப்புள் வரினும் பழம்புள் போயினும் நடுங்காத காவலையுடையது நினது நாடு' என்று கூறுகிறார்.

**சேரனது ஈகையறம்**

'காவலனேஸ மாற்றரசர் தந்த திரையினால் தம்மை வந்தடைந்த சுற்றத்தாரை மகிழ்ச் செய்து வாழ்விக்கும் கொல்லிமலையோரின் போர் மறவனே!

**கொல்லிப் பொருந (**நாராயண வேலுப்பிள்ளை, பதிற்றுப்பத்து, ப/180)

நின் செல்வம் எல்லையற்றது. நின்னைப் பாடிய நா பிறரை ஒருபோதும் பாடாது எனும்படி வரையாது வழங்கும் பெருமை உடையவன் நீ! நின் நாடு மிக்க பெருமை உடையது எனக் கேட்டு நின்னை நாடி வந்தேன் நின்னையும் கண்டேன் பெருமானே, முயற்சியொடு பகைவரை வெல்லும் படையுடன் நின் நாட்டில் சோறு பெருக நீ செயலாற்றி நடப்பாயாக என்று கூறுகிறார்.

மீக் கூறு மன்ன னிலம் (மு.வரதராசன் உரை, திருக்குறள், ப.78)

என்ற குறள் இக்கருத்தை அரண் செய்கிறது.

**சேரனது புகழ்**

வலி மிகுந்த யானைப் படையினையும் குதிரைப் படையினையும் உடையவனேஸ பொறையனேஸ நின் புகழை விரித்துஞ் சொல்ல முடியவில்லை. தொகுத்துஞ் சொல்ல முடியவில்லை. அதனால் மயங்கிய நெஞ்சினனான எனக்கு ஒருக்காலும் நின்னை வாழ்த்தவும் முடியாது.

**செறுத்த செய்யுள் செய்செந்நாவின்**

**வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்**

**இன்றுளன் ஆயின் நன்றுமன்** (புலியூர்க்கேசிகன் உரை, புறநானூறு, ப.100)

பல பொருட்களையும் அடங்கிய செய்யுட்களை விரைந்து பாடும் செந்நாவும், மிக்க அறிவும் விளங்கிய புகழும் உடைய கபிலன் இன்று இருந்தால் நல்லது' என்று சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பொருந்திலிளங்கீரனார் பாடியுள்ளார்.

**மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின்**

**உவைல கூராக் கவலையி னெஞ்சின்**

**நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்** (நாராயண வேலுப்பிள்ளை, பதிற்றுப்பத்து, ப.212)

**சேரனது வீரம்**

'நாடுகாவலை ஏற்றுக் கொண்டு வானத்து மழையும் நாணும் படியாக இரவலர்க்கு வரையாது வழங்குபவன் கடுமான் கோதை. அவன் எம் இறைவன் அவன் தலைநகரிலே அந்நகரவரே போலக் கேட்பாரின்றித் தலை நிமிர்ந்து செல்வது எம் போன்ற இரவலர்க்கு மட்டும் உரியது. புதுவதற்கு எளிது எனப் பகைவர் நினைத்தால் அது அறியாமையாகும்.

இடையன் ஆட்டுமந்தையை ஒட்டிக் கொண்டு புலி படுத்திருக்கும் இடத்திற்குப் போயினாற் போல வலிமிகுந்த அவன் ஊரினும் புகமுயன்ற மாற்றார் தம் நிலையும் படையும் அழிந்து போகும். அவர் முயற்சியும் அவர்க்குக் கேடாக அமையும்' என்று சேரமான் குட்டுவன் கோதையை, கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியுள்ளார்.

**மடிவாய்க் கோவலர் (**இரா.மோகன், பெரும்பாணாற்றுப் படை, ப.210)

என்று பெரும்பாணாற்றுப் படையும்,

இடையன் மடிவிடு விளை (புலியூர்க் கேசிகன், அகநானூறு, ப.357)

என்று அகநானூறும்,

சிறுதலை வெள்ளைத் தோடு (புலியூர்க் கேசிகன், குறுந்தொகை, ப.247)

என்று குறுந்தொகையும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

**சோழர்கள்**

சோழநாட்டை ஆண்டவர்கள் சோழர்கள் எனப்பட்டனர். சோழன் நலங்கிள்ளியின் போர்மற மேம்பாட்டைக் கூறுவதால் இது அரச வாகையாயிற்று.

**போர் எனில் புகலும் புனைகழல் மறவர்**

**காடிடைக் கடந்த நாடு நனி சேஎய**

**செல்வேம் அல்லேம் என்னார் (புலியூர்க் கேசிகன், புறநானூறு, ப.68)**

கிள்ளியே! முழுநிலவு போல உன் புகழ் நெடுந்தொலைவுக்கும் சிறப்புடன் விளங்கும்.

**மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது (இரா.மோகன், முல்லைப் பாட்டு, ப.328)**

போரைத் தவிர நீ வேறெதையும் நாடுவதில்லை. வீரக்கழல் புனைந்த நின் மறவரோ போர் எனில் 'யாம்' என எழுவர்.

**உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்**

**செறினுஞ்சீர் குறை விலர் (**மு.வரதராசன் உரை, திருக்குறள், ப.156)

'தூரத்து நாடு ஆயிற்றே, அங்கு யாம் வாரேம்' என்று கூறுபவரல்லர் என்று கூறுகிறார்.

**பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே** (இராகவையங்கார், குறுந்தொகை, ப.429)

என்ற குறுந்தொகைப் பாடல் இக்கருத்தை அரண் செய்கிறது.

**சோழனது வெற்றி**

பொதிய மலையினை உடைய பாண்டியரின் நன்னாடு வளமுடையது. அந்நாட்டு ஏழெயில் கோட்டைக் கதவை உடைத்து, அதனைக் கைப்பற்றி நின் புலிச் சின்னத்தை அதன் கண் பொறித்த போர் ஆற்றலுடையவன் நீஸ சாலையினது வாயில் மாடந்தோறும் செம்மறிக் கிடாக்களை வெட்டி நீ நடத்தும் சிறு சோற்று விழாவினும் நின் பாசறைக் காட்சி பெரிதும் சிறப்புடையது ஆகும். என்று கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியின் வெற்றியைப் பாடியுள்ளார்.

**சோழனது ஈகை**

'குளிர்ந்த நீர்ப் பெருக்கின் ஒலியல்லாது வருந்தி' வாழி வளவஸ எம் துயரினைத் தீர்ப்பாயாக் என்று நின்முன் நின் படையினர் பூசலிடுவதனைக் கனவிலும் காணாதவன் நீஸ அனைவரையும் புலி தன் குட்டிகளைப் பேணிக் காப்பது போலச் செவ்வையாகக் காத்து வருபவன் நீ. பெரும் சிறப்புடன் புது வருவாய் மலிந்தது நின் நாடு. பலவாக மலையினின்றும் இழிந்து நிலத்தையும் கடந்து, கடலை நோக்கிச் செல்லும் கானாறுகளைப் போலப் புலவர் யாவரும் நின்னையே நோக்கி வருகின்றனர்.

**கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்**

**பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்** (இரா.மோகன், பெரும்பாணாற்றுப்படை, ப.221)

நினக்கு மாறுபட்ட இரு வேந்தர் நிலத்தினையும்வென்று ஆட்படுத்தினாய். வளவனே நீ வாழ்வாயாக என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை இடைக்காடனார் பாடியுள்ளார்.

**சோழனது குணவென்றி**

பொறுத்தற்கு அரிய பிழையையும் பொறுத்த குண வென்றியைக் கூறுதலால் அரசவாகை ஆயிற்று.

'நீண்ட அம்பினையும் வளைந்த அம்பினையும் கொண்ட மறவர்களின் தலைவனேஸ நின் பிறப்பையே யான் ஐயுறுகின்றேன். நின் முன்னோர் பார்ப்பார் துன்புற எதனையும் செய்யார். மற்றும் நினக்கு மட்டும் இவ்வெறுக்கத்தக்க செய்கை நியாயமோடு எனக் கூறி நீ

என்னை வெறுக்கக் கூடிய தவறு செய்தேன். அது கண்டும் நீ என்னை வெறாமல் நின் உத்தம குணத்தால் நீயே பிழை செய்தவன் போல நாணங்கொண்டாய்.

**தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்**

**இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும்** (புலியூர்க் கேசிகன், புறநானூறு, ப.88)

என்று கூறி நினது ஆயுள் காவிரி மணலினும் பலவாகுக எனக் கூறி, வாழ்த்துகின்றார்.

**சோழனது அறமும் மறமும்**

போரொடு திறத்தல் அரசர்க்குரிய இயல்பு என்று நினைந்து கூறியமையின் அரசவாகை ஆயிற்று.

'யானைகள் உணவில்லாது பிளிறுகின்றன. பாலில்லாக் குழந்தைகள் அழுகின்றன. மகளிர் பூவில்லாத வெறும் தலையை முடிகின்றனர். இவற்றையெல்லாம் கேட்டும் நாணம் கொள்ளாது இங்கு இனிதாக நீ இருப்பது தவறானது. நீ அறத்தை உடையவனானால் 'இது நின் கோட்டை தானே' என்று கூறித் திறந்து விடு. மறத்தை உடையவனானால் எதிர்த்து நின்று போர் செய்' என்று சோழன் நெடுங்கிள்ளியை கோவூர்கிழார் இடித்துரைக்கின்றார்.

**சோழ நாட்டு வளம்**

நலங்கிள்ளி சேட்சென்னியின் நாடு மருத வளத்தால் மிகுந்தது. வயலிடத்தேப் பொய்கையிற்கிடைத்த வாளை மீனைத் துணைக்கறியாகக் கொண்டு, புது நெல்லின் வெண்சோற்றைத் தின்று உழவர்கள் மகிழ்வர். அவர் சிறுவர்களோ தென்னை நெற்றை விரும்பாது, உயரக் குவிந்த போரின் மீது ஏறிச் சென்று பனம்பழம் பறிக்க உந்திக் கொண்டு இருப்பர். இத்தகைய புதுவருவாயினை உடையது சோழன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியின் சோழ நாடு என்று கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியுள்ளார்.

**பாண்டியர்கள்**

மூவேந்தர்களுள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் பாண்டியர்களாவர்.

**பாண்டிய நாட்டு அரண் சிறப்பு**

புலவர் பாடுவதற்கும் அருமையான சிறப்புடைய தலைவனே! பாதாளத்தை எட்டுவது போன்ற ஆழமான அகழி நாற்புறமும் ஆழ்ந்திருக்க உயரமான மதிலுடன் கானப் பேரெயில் விளங்கியது.

**மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்** (இரா.மோகன், மதுரைக்காஞ்சி, ப.63)

**வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்**

(இரா.மோகன், பெரும்பாணாற்றுப்படை, ப.219)

**கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய**

**இரும்புண் நீரினும் மீட்டற்கு அரிதுஎன**

**வேங்கை மார்பன் இரங்க** (புலியூர்க் கேசிகன் உரை, புறநானூறு, ப.51)

வேங்கை மார்பன் வருந்தும்படி கானப்பேர் எயிலைக் கடந்து வெற்றி வெற்றாய். நின் கைவேல் வெற்றிப் புகழுடன் மிளிர்வதாக' என்று கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாடியுள்ளார்.

**பாண்டியனது வேலின் பெருமை**

தலையாலங்கானத்தில் எழுவரையும் வென்று அவர்களது முரசைக் கைக்கொண்டாய்.

**எழுவர் நல்வல மடங்க ஒரு பகல்**

**முரசொடு வெண்குடை அகப்படுத்து**

(புலியூர்க் கேசிகன் உரை, அகநானூறு, ப.128)

தம் கணவர் போரில் பட்டதனால் கைம்மை பூணும் ஒண்ணுதலார் கரிய தம் கூந்தலைக் களையக் கண்டனையால் அவர் நிலைக்கு இரங்கிப் போரிடுவதைத் தானாகவே நிறுத்தியது நின் கைவேல்.

**களவேள்வியும் மறை வேள்வியும்**

போரின் போது பகைவரது முடித்தலைகளை அடுப்பாக்கிக் குருதியைப் புனலாகப் பெய்து, பகைவர் தசையையும், மூளையையும் அதனுள் இட்டு, வெட்டிய தோள்களைத் துடுப்பாகக் கொண்டு துழாவிக் களவேள்வி செய்வர்.

**கறுவு கொண் நெஞ்சமொடு களம் வேட்டன்றே**

(இரா.மோகன், திருமுருகாற்றுப்படை, ப.9)

நான்மறை முதல்வர் சூழ்ந்திருக்க அடிப்பட்ட மாமன்னர் வேள்விக்கு ஏவல் செய்ய மறை வேள்வி இயற்றிய வாள்வலியும் உடையவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

**பாண்டியனின் வீரம்**

**ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**

**புதுவது அன்று; இவ்வுலகத் தியற்கை**

(புலியூர்க் கேசிகன் உரை, புறநானூறு, ப.128)

'ஒருவனை ஒருவன் கொல்லுதலும், தோற்றலும் இந்த உலகில் புதுமையன்று. உலக இயற்கை,

**பண்டுமிவ் வுலகத் தியற்கை**

**அஃதின்றம் புதுவ தன்றே (புலியூர்க் கேசிகன் உரை, கலித்தொகை, ப.22)**

நெடுஞ்செழியனின் பெருமை அறியாது எழுவர் போரிட்டுத் தோற்றனரே அந்த வீரமே புதுமை.

அவன் இளம் வயதிலேயே ஏழுபேரை வென்றவன். பால் குடித்தலை மறந்து இன்றே உணவுண்டானே போலும் இளையனாகவும் உள்ளான். அவன் எழுவரை வென்றதைப் பெருமையாக நினைக்கவும் இல்லை' என்று இடைக்குன்று]ர் கிழார் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றி பாடியுள்ளார்.

கம்பத்திலே கட்டப்பட்டிருந்த நின் யானைகள் கட்டினை அறுத்துச் சென்று தாமாகவே பகைவரது காவல் நீர்த்துறைகளைக் கலக்கி அழிக்கும்.

கூர்மையான அம்புகளும் வளைந்த வில்லும் கொண்டு முருகனது கூளிப்படை போல வருபவர் நின் மறவர். தம்மால் கொள்ளுமட்டும் பகைவர் வயலுள் புகுந்து அவர் கொள்ளையிட்ட பின் எஞ்சிச் சிதறிக் கிடக்கும் தானியங்களை மாற்றார் பதற்றத்துடன் கொண்டு செல்வர்.

அவர் காவல் மரங்களும் நின்னால் வெட்டப்பட்டு அழிந்தன. வீட்டில் சமையல் செய்வார் மூட்டிய தீ அவியுமாறு ஊருக்கே எரியூட்டினாய். இவ்வளவும் தம் நாட்டிடை விளையக் கண்டும் நின்னை வெல்லும் வகை யாது? என அறியாது மயங்கினர் பகைவர் என்று நெடுஞ்செழியனின் படை பற்றியும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

**குறுநில மன்னர்கள்**

குறுகிய நிலத்தை ஆண்டவர்கள் குறுநில மன்னர்கள் எனப்பட்டனர். இவர்களுள் பலர் வள்ளல்களாகவும் விளங்கினர்.

**அதியமான் நெடுமானஞ்சி**

இவன் தகடூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன். ஔவையாரை உயிர் நண்பராகக் கொண்டவன்.

**அதியமானின் வீரம்**

'நீர்த்துறையின் கண்ணே யானையைக் காணாய்ஸ சிறு பிள்ளைகள் அதன் வெண் கோட்டைக் கழுவுகின்றனர். அப்பெருங்களிறு அவருக்கு எளியதாய் இனியதாய் விளங்குகின்றது.

அவ்வாறே பகைவர் நெருங்குவதற்கு அரிய வலிமையுடையாய் எனினும் நீ எமக்கு இனிதாகவே விளங்குகின்றாய். பெருமானே!

கையிலே வேல், காலிலே வீரக்கழல், உடலில் வேர்ப்பு, கழுத்திலே பசும்புண் இவற்றுடன் பனம்பூமாலையையும், வெட்சி மலரும் வேங்கைப் பூவும் சூடியவனே! புலியுடன் சண்டையிட்ட யானை சண்டை தீர்ந்தும் சினம் அடங்காதது போல சிவந்த கண்ணோடு நிற்கிறாயே!

**செறுவர் நோக்கிய கண் தன்**
**சிறுவனை நோக்கியுஞ் சிவப்பானாவே**

(புலியூர்க் கேசிகன் உரை, புறநானூறு, ப.150)

நின்னைச் சினந்தவர் எவரும் பிழைத்திராரே! இப்புதல்வனைக் கண்டும் கூட சிவந்த நிறம் மாற வில்லையே என்று பாடுகிறார்.

**ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்**
**தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்**
**ஈர்ப்புடைக் கராஅத் தன்ன** (புலியூர்க் கேசிகன் உரை, புறநானூறு, ப.154)

இளையன் என்று இகழ்ச்சியாக எவரேனும் கூறியவராக அவன் நாட்டினுள் வந்தால் எத்தன்மையராக இருப்பினும் அதியனை வெல்லல் அரிது என்று கூறுகிறார்.

**அதியமான் மற மாண்பு**

'நின் யானைகள் போகக் கண்ட பகைவர் தம் அரஹக்குக் கதவும், கணைய மரமும் புதிது செய்ய முயல்வர். நின் குதிரைகள் போகக் கண்டால் காட்டு வாயில்களை வேலமுள்ளால் அடைப்பர். பகைவர் மீது நீ எறிந்த வேல் ஊடுருவிச் செல்லக் கண்டவர் தம் வாளை உறையினின்று எடுக்கவும் அஞ்சுவர். நின் வீரரின் திறங்கண்டவர் தம் அம்பையும் மறைத்துக் கொள்வர்' என்று ஔவையார் பாடியுள்ளார்.

**மலையமானது வீரம்**

இவன் தேர்வண் மலையன் என்று அழைக்கப்பட்டவன். 'பஞ்சு போன்ற மென்மையான ஊனையும் கள்ளையும் இடைவிடாது பருகி மகிழும் எம் தலைவனேஸ பகைவலி அனைத்தும் தொலைத்த ஆண்மையனேஸ உழுது வரும் மாடு நெல்லைப் பிறர்க்கு அளித்துத் தான் வைக்கோலைத் தின்பது போலப், பெற்ற செல்வத்தைப் பிறர்க்கு வழங்கி எஞ்சியதை அமுதாக உண்டு மகிழும் வல்லாளனே! என்னே நின் பெருமைஸ வென்றவனும் வெற்றிக்கு நீயே காரணன் என்பான். தோற்றவனும் தன்னைத் தோற்பித்தவன் நீயே என்பான். இவ்வாறு போரிட்ட

இருவருமே புகழக் கூடிய பெருமானே! நீவாழ்க' என்று வடமவண்ணக்கண் பெருஞ்சாத்தனார். தேர்வண் மலையனைப் பாடியுள்ளார்.

**பிட்டங் கொற்றனது வெற்றி**

கேழல் உழுத புழுதியிலே விதைத்தத் தினையும் விளைந்து கதிர் முற்றியது. நல்ல நாளிலே புதிதுண்ண எண்ணிய குறவர் மானிறைச்சிப் புலால் நாறும் பானையைக் கழுவாதே மரையாவின் பாலை உலைநீராக்கிச் சந்தன விறகால் எரித்து அத்தினையைச் சமைத்து அகன்ற வாழையிலையிலே பகுத்துண்ணும் வளமுடைய குதிரை மலைத் தலைவனே!

கூர்வேலும் வேங்கை மாலையும் வடித்த அம்பும் கொண்ட வில் வீரர்களின் தலைவனே! கொடாதவர் நாண என்றும் கெடாது பரந்து விரிந்த நின் தூய பெரும் புகழை இத்தமிழகம் முழுமையும் கேட்கத் தம் செவ்விய பொய்யாத நா வருந்துமாறு பரிசிலர் நின்னை வாழ்த்திப்பாடுவர். அங்ஙனமே யானும் பாடுவேன். எனக்கும் அருள் செய்வாயாக என்று கருவூர் கதப்பிள்ளை சாத்தனார் பிட்டங் கொற்றனைப் பாடியுள்ளார்.

**முடிவுரை**

இக்கட்டுரையில் அரசவாகைத் துறை விளக்கம், பாடிய புலவர்கள், பாடப்பட்ட அரசர்களான மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் அவர்தம் வெற்றி, வீரம், புகழ், கொடை பற்றிய செய்திகளை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

ஆனந்தன், சு. தமிழ் இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், திருச்சி, 2002.

இராகவையங்கார், இரா., குறுந்தொகை, கவின்கலை அச்சகம், சென்னை, 1993.

இராசா, ஆ.வே., திருக்குறள், திருவள்ளுவர் பதிப்பகம், வைரி செட்டிப் பாளையம், 2001.

இராசா, கி. தமிழர் இலக்கிய வரலாறு, அன்னை நிலையம், திருச்சி, 2001.

இராமகிருட்டிணன், ஆ., தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2004.

இளம்பூரணர் (உ.ஆ.). தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

சாமிநாத ஐயர், உ.வே., புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

சிங்கார வேலன், சொ., தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை, 1998.

சிதம்பரனார், சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அப்பர் அச்சகம், சென்னை, 1943.

சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

செயபால், இரா., அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
சோமசுந்தரனார், பொ.வே., புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2002.
ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக் கலை, அப்பர் அச்சகம், சென்னை, 1955.
நாராயண வேலுப்பிள்ளை, ம., பதிற்றுப்பத்து, கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, 1994.
பாரதிதாசன், தேனருவி, பாரி நிலையம், சென்னை.
புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). அகநானூறு, பாரி நிலையம், சென்னை, 1960.
புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). குறுந்தொகை, பாரி நிலையம், சென்னை, 1980.
புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை, 1978.
புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). நற்றிணை, பாரி நிலையம், சென்னை, 1980.
புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). புறநானூறு, பாரி நிலையம், சென்னை, 1958.
மாணிக்க வாசகன், ஞா. (உ.ஆ.). சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை, 1995.
மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962.
மோகன், இரா., சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம், தஞ்சாவூர், 2004.

## *References*

*Ananthan, S. Tamil Ilakkiya Varalaru, Kanmani Pathippagam, Trichy, 2002.*
*Ragavaiyengar, R., Kurunthogai, Kavinkalai Achagam, Chennai, 1993.*
*Rasa, A.V., Thirukkural, Thiruvalluvar Pathippagam, Vairi Chetti Palayam, 2001.*
*Rasa, Ki. Tamilar Ilakkiya Varalaru, Annai Nilayam, Trichy, 2001.*
*Ramakritinan, A., Tamilaga Varalarum, Tamilar Panpadum, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 2004.*
*Ilampooranar (Ed.). Tholkappiyam, Porulathikaram, Saratha Pathippagam, Chennai, 2005.*
*Saminatha Iyer, U.Ve., Purananooru Moolamum Uraiyum, Tamil University, Thanjavur, 1985.*
*Singaravelan, So., Tholkappiyam, Kazhaga Veliyeedu, Chennai, 1998.*
*Chidambaranar, Sami., Ettuthogaiyum Tamizhar Panpadum, Appar Achagam, Chennai, 1943.*
*Subramaniyan, S.Ve., Tholkappiyam, Manivasagar Pathippagam, Chennai, 1998.*

*Jayabal, R., Agananooru, New Century Book House, Chennai, 2004.*

*Somasundaranar, P.V., Puraporul Venbamalai, Thirunelveli Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai, 2002.*

*Gnanasambandan, A.S., Ilakkiya Kalai, Appar Achagam, Chennai, 1955.*

*Narayana Velupillai, M., Pathitrupathu, Kannappa Art Printers, Chennai, 1994.*

*Bharathidasan, Thenaruvi, Pari Nilayam, Chennai.*

*Puliyoorkesikan (Ed.). Agananooru, Pari Nilayam, Chennai, 1960.*

*Puliyoorkesikan (Ed.). Kurunthogai, Pari Nilayam, Chennai, 1980.*

*Puliyoorkesikan (Ed.). Silappathikaram, Pari Nilayam, Chennai, 1978.*

*Puliyoorkesikan (Ed.). Natrinai, Pari Nilayam, Chennai, 1980.*

*Puliyoorkesikan (Ed.). Purananooru, Pari Nilayam, Chennai, 1958.*

*Manickavasagan, G. (Ed.). Silappathikaram, Uma Pathippagam, Chennai, 1995.*

*Manickam, V.Suba., Tamil Kathal, Pari Nilayam, Chennai, 1962.*

*Mohan, R., Sanga Ilakkiyam, Pathupattu, Thiruvalluvar Kanippori Achagam, Thanjavur, 2004.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com